# ශ්‍රී ලංකා ප්‍රජාතාන්ත්‍රික සමාජවාදී ජනරජයේ ගැසට් පත්‍රය

අති විශෙෂ

# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை

அதி விசேஷமானது

අංක 2163/25 - 2020 පෙබරවාරි මස 20 වැනි බ්‍රහස්පතින්දා - 2020.02.20

*2163/25 ஆம் இலக்கம் - 2020 ஆம் ஆண்டு பெப்புருவரி மாதம் 20 ஆந் திகதி வியாழக்கிழமை*

(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)


## பகுதி I : தொகுதி (I) - பொது

### அரசாங்க அறிவித்தல்கள்

*ச. வ. பி. 5/2011* (ii)

**2008 ஆம் ஆண்டின் 40 ஆம் இலக்க, தேசிய பொதுவழிகள் சட்டம்**

*11 ஆம் பிரிவின் கீழான கட்டளை*

*2008 ஆம் ஆண்டின் 40 ஆம் இலக்க, தேசியப் பொதுவழிகள் சட்டத்தின் 11 ஆம் பிரிவினால் எனக்குரித்தாக்கப்பட்ட தத்துவங்களின் பயனைக்கொண்டு, வீதி மற்றும் நெடுஞ்சாலைகள் அமைச்சர் ஜோன்ஸ்டன் சேவியர் பெர்ணாந்து ஆகிய நான், மேற்சொன்ன சட்டத்தின் 9 ஆம் பிரிவின் கீழ் ஆக்கப்பட்டதும், 2020 ஆம் ஆண்டு பெப்புருவரி மாதம் 18 ஆந் தேதிய 2163/15 ஆம் இலக்க, அதிவிசேட வர்த்தமானியில் வெளியிடப்பட்டதுமான கட்டளை மூலம் "கடுகதிப்பாதை" ஒன்றாகப் பெயர் குறிக்கப்பட்டதும், இக்கட்டளைக்கான அட்டவணையில் குறித்துரைக்கப்பட்டதுமான, "தெற்கு தேசிய நெடுஞ்சாலையை (கொட்டாவ-மத்தள)", "பயன்படுத்துநர் கட்டணத் தேசிய நெடுஞ்சாலை" ஒன்றாக இக்கட்டளை மூலம் பெயர் குறிக்கின்றேன்.*

1. *தெற்கு தேசிய நெடுஞ்சாலையை பயன்படுத்துநர் கட்டணத் தேசிய நெடுஞ்சாலையொன்றாகப் பெயர்குறிக்கின்ற, 2011, நவெம்பர் 08 ஆந் தேதிய 1731/2 ஆம் இலக்க, அதிவிசேட வர்த்தமானி;*

2. *காலி - மாத்தறை தேசிய நெடுஞ்சாலையை பயன்படுத்துநர் கட்டணத் தேசிய நெடுஞ்சாலையொன்றாகப் பெயர்குறிக்கின்ற, 2014, பெப்புருவரி 19 ஆந் தேதிய 1850/33 ஆம் இலக்க, அதிவிசேட வர்த்தமானி;*

3. *கொடகம - கஸ்கல தேசிய நெடுஞ்சாலையை (தெற்கு கடுகதிப் பாதையின் பிரிவு) பயன்படுத்துநர் கட்டணத் தேசிய நெடுஞ்சாலையொன்றாகப் பெயர்குறிக்கின்ற, 2019, நவெம்பர் மாதம் 09 ஆந் திகதிய 2148/62 ஆம் இலக்க, அதிவிசேட வர்த்தமானி ; அத்துடன்*


1A - PG 4886 — 117 (2020/02)

*இவ் அதி விசேட வர்த்தமானியை* www.documents.gov.lk *என்னும் இணையத்தளத்திலிருந்து பதிவிறக்கம் செய்ய முடியும்.*

*4. பறவக்கும்புக்க - மத்தள தேசிய நெடுஞ்சாலையை (தெற்கு கடுகதிப் பாதையின் பிரிவு) பயன்படுத்துநர் கட்டணத் தேசிய நெடுஞ்சாலையொன்றாகப் பெயர்குறிக்கின்ற, 2019, நவெம்பர் மாதம் 08 ஆந் திகதிய 2148/44 ஆம் இலக்க, அதிவிசேட வர்த்தமானி*

*என்பவற்றில் வெளியிடப்பட்ட மேற்சொன்ன சட்டத்தின் 11 ஆம் பிரிவின் கீழ் ஆக்கப்பட்ட கட்டளைகள், அவற்றின்கீழ் செய்யப்பட்ட எதற்கும் பங்கமின்றி இத்தால் இல்லாதொழிக்கப்படுகின்றன.*

**ஜோன்ஸ்டன் சேவியர் பெர்ணாந்து,**
*வீதி மற்றும் நெடுஞ்சாலைகள் அமைச்சர்.*

*பத்தரமுல்லை,*
*2020, பெப்புருவரி 19.*

**அட்டவணை**

**பயன்படுத்துநர் கட்டணத் தேசிய நெடுஞ்சாலையைக் கொண்டுள்ள இடப்பரப்பு**

*தெற்கு கடுகதிப்பாதை (கொட்டாவ - மத்தள) என்றவாறாக பெயர்குறிக்கப்பட்ட கடுகதிப்பாதையின் கொட்டாவ (0.000 கி. மீ.) மற்றும் மத்தள (200.451 கி. மீ.) என்பவற்றுக்கிடையே அமைந்துள்ளதும், 200.451 கிலோ மீற்றர் நீளமும் 70.000-100.000 மீற்றர் அகலமும் கொண்டதுமான வீதிப்பாகம்.*

*03-135*

*இலங்கை அரசாங்க அச்சுத் திணைக்களத்திற் பதிப்பிக்கப்பெற்றது.*